# Field Work Centre

FWC

# தவணைப் பரீட்சை, யூன்- 2015
# Term Examination, June - 2015

| தரம் :- 13 (2015) | அரசியல் மூலத்தத்துவங்கள் - I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

## பகுதி I

- ❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- ➢ 1 - 15 வரையிலான வினாக்களிலுள்ள ஐந்து கூற்றுக்களுள் தலைப்புக்குப் பொருத்தமான சரியான கூற்றுக்களின் தொகுதியைத் தெரிவு செய்க.

01) அரசியல் விஞ்ஞானம் என்பது

A - மனிதர்களை இவ்வுலக வாழ்வில் ஆன்மீக ரீதியாக மீட்டெடுக்க முயல்கின்றது.

B - சமூக விஞ்ஞானங்களுள் தலையாய விஞ்ஞானமாகக் கருதப்படுகிறது.

C - இறந்தகால அரசியல் பிரச்சினைகளைக் கற்பதில் கவனம் செலுத்துவதுடன் நிகழ்கால அரசியலுக்கும் முக்கியத்துவம் அளிக்கின்றது.

D - அரசிலின் பல்வேறு கோட்பாடுகளையும் நியதிகளையும் கற்கும் பாடத்துறையாக இனங் காணப்படுகின்றது.

E - சமூக விஞ்ஞானங்களின் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பாடமாகும்.

1) CBED 2) ABCD 3) ABDC 4) ACDE 5) ABCE

02) அரசியல் என்பது

A - அதிகாரத்துடன் தொடர்புடையதும், அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதையும், பரவலாக்குவதையும் நோக்கமாகக் கொண்டதாகும்.

B - அரசியல்வாதிகளாலும், அரசியல் நிறுவனங்களாலும் மேற்கொள்ளப்படுகின்ற செயற் பாடாகும்.

C - மோதும் நலன்கள், அபிப்பிராயங்கள், நம்பிக்கைகள் என்பவற்றின் இறுதிப் பெறுபேறாகும்.

D - ஒழுக்க, சமய நெறிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு செயற்படுகின்றதாகும்.

E - அதிகார அரசியலின் நடைமுறைப் பகுதியாகும்.

1) BCDE 2) ACBD 3) ADBE 4) ADCE 5) ABCE

03) அரசறிவியல் கற்கை நெறி

A - கிரேக்கத்தில் முறையாகக் கற்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

B - இயற்கை விஞ்ஞானத்தின் பாடப் பரப்புக்களையும் உள்ளடக்குகின்றது.

C - ஒவ்வொரு காலங்களிலும் நிகழ்ந்த அரசியல் நிகழ்வுகளை பாடத்துறையில் இணைத்துள்ளது.

D - அரசையும் அரசாங்கத்தையும் முக்கிய அலகுகளாக கொண்டது.

E - 20ம் நூற்றாண்டின் அரைப்பகுதியில் நடத்தை வாதத்துடன் தொடர்புடைய புதிய அலகுகளையும் இணைத்துக் கொண்டது.

1) BACD 2) CBDE 3) ACDE 4) BAED 5) ABCE

04) அரசறிவியலைக் கற்பதன் முக்கியத்துவம்

A - புலனாய்வுத் தன்மையை விருத்தி செய்து கொள்ளுதல்

B - தேசிய, மற்றும் சர்வதேச விடயங்களை விளங்கிக் கொள்ளல்.

C - தர்க்க ரீதியான ஒரு அரசியல் உயிரியாக மாறமுடிதல்.

D - அரசியல் வாதிகளின் தனிப்பட்ட இயல்புகளை அறிதல்.

E - பொறுப்புக்களையும் கடமைகளையும் உணர்ந்து செயலாற்றுதல்.

1) ABCD 2) BACE 3) BCDE 4) ABDE 5) ACDE

05) அரசாங்கம் என்பது

A - அரச அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய மரபுரிமையான கருவியாகும்.

B - காலத்துக்கக் காலம் மாற்றமடையக்கூடிய நிரந்தரமற்ற ஸ்தாபனமாகும்.

C - ஸ்பரிசிக்கக்கூடிய புலனீடானதுமாகும்.

D - சட்ட, நிர்வாக, நீதி ஆகிய முத்துறைகளைக் கொண்டதாகும்.

E - சமூகத்தின் பொதுச் சித்தத்தின் முகவராகும்.

1) BCDE 2) ABDE 3) ACDE 4) ABCD 5) ABCE

06) காலத்தின் வளர்ச்சியோடு அரசியல் விஞ்ஞானத்தின் பாடப்பரப்புடன் சேர்க்கப்பட்ட புதிய அம்சங்கள்

A - புதிய அரசாங்கமுறை மாதிரிகள்

B - சமயக் கருத்துக்கள்

C - அரசியல் அதிகாரம் மற்றும் அதிகாரப் போராட்டம்

D - பொதுத்துறை நிர்வாகம் மற்றும் பொதுக் கொள்கை உருவாக்கம்

E - மோதல் முகாமைத்துவமும் சர்வதேச அரசியலும்

1) CEAD 2) BADC 3) BDCE 4) DABE 5) AECB

07) நிலமானிய அரசு முறையின் அடிப்படைப் பண்புகள்

A - மன்னராட்சிமுறை

B - பிரதேச ரீதியாக அதிகாரம் பரவலடைந்திருந்தமை

C - பிரபுக்களின் தலைமைத்துவம்

D - பாப்பரசரின் ஆதிக்கம்

E - அரசாங்கத்தின் அதிகாரம் பன்முகப்படுத்தப்பட்டிருந்தமை

1) BDCE 2) DCAE 3) EABD 4) BADC 5) ABCE

08) அரசு பற்றிய சமூகப் படிமுறைக் கோட்பாடு தொடர்பானது

A - சமூகப் பிணைப்பினாலேயே சமூக வளர்ச்சி இடம்பெற்றுள்ளது.

B - அரசு நீண்டகாலப் படிமுறை வளர்ச்சியின் பேறாகும்.

C - பொதுவுடமைவாதக் கோட்பாட்டாளரால் முன்வைக்கப்பட்டுள்ளது.

D - குடும்பம் என்னும் ஆரம்ப அலகு அரசு வரை உயர்ச்சி பெற்றுள்ளது.

E - ஒன்றிணைந்து வாழ முற்பட்டதன் மிக உயர்ந்த சந்தர்ப்பம் அரசாக உருவாகியமையாகும்.

1) ABCD 2) BCDE 3) CDEA 4) EABC 5) EDBA

09) லிபரல் சனநாயக அரசாங்க முறையின் இயல்புகள்

A - சட்டத்தின் ஆட்சி

B - யாப்புறு வாதம்

C - சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்

D - தனிக்கட்சி முறைமை

E - சுதந்திர ஊடகம்

1) AECB 2) EDBA 3) DCAE 4) BCDE 5) BACD

10) அரசுபற்றிய சமவுடமைக் கோட்பாடு தொடர்பானது

A - புராதன கம்யூனிச சமூகத்தின் அரசு இருக்கவில்லை.

B - அரசு சதாவும் நிலைத்திருத்தல்.

C - அது ஒரு வர்க்க கருவியாகும்.

D - வகுப்பு முரண்பாடு இருக்கும் வரை அரசு நிலைத்திருத்தல்.

E - கம்யூனிச சமூகத்தில் அரசு உதிர்ந்து மறைந்து விடும்.

1) ABEC 2) CDAE 3) ABCD 4) BCDE 5) DEAB

11) அமுக்கக் குழுக்கள்

A - பொதுச் சமூக நலன்களை ஒன்று திரட்டுவது அடிப்படை நோக்கமாகும்.

B - தனிப்பட்ட நலன்களுக்காக ஒழுங்கமைந்துள்ளன.

C - சனநாயக அரசியல் வளர்ச்சியின் ஒரு அளவு கோலாகும்.

D - அதிகாரத்தைப் பெறுவதனை நோக்கமாகக் கொண்டனவன்று.

E - கொள்கை உருவாக்கத்தின் போது அரசாங்கத்துக்கு அழுத்தத்தைக் கொடுக்கும்.

1) ABCD 2) CDEA 3) BCDE 4) DEAB 5) EABC

12) அரசியல் கட்சிகள்

A - கொள்கை உருவாக்கத்தில் நேரடியாகப் பங்கு கொள்ளல்

B - வாக்காளர்களுக்கு அறிவூட்டுதல்

C - சிதறியுள்ள மக்கள் கருத்துக்களை ஒன்று திரட்டல்

D - சமூக பலத்தை அதிகார பலமாக மாற்றிக் கொள்ளல்

E - அரச அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகப் போராடல்

1) BADC 2) CDAE 3) BCDE 4) ABED 5) ABCE

13) நல்லாட்சி ஒன்றின் மூலங்களாக அமைவன

A - வெளிப்படைத் தன்மை

B - ஆதிக்கவாதம்

C - பொறுப்பு

D - சமூக மதிப்பீடு

E - சட்டத்தின் ஆட்சி

1) DEAB 2) EABC 3) BCDE 4) ABCD 5) DCAE

14) நலன்புரி அரசு

A - சமூகப் பாதிப்புக்குள்ளான பிரிவினரின் பௌதிக விருத்தியில் பங்கு கொள்ளல்.

B - இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் எழுச்சி பெற்று வந்துள்ளது.

C - கெயின்சின் பொருளாதாரத் தத்துவத்தின் மூலம் கோட்பாட்டு ரீதியான அடிப்படையைப் பெற்றுக் கொண்டது.

D - சமனான பிரசைகள் சமனான வாய்ப்புகள் என்னும் சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டிருத்தல்.

E - பொருளாதார நடவடிக்கைகளில் அரசின் தலையீடு குறைவடைந்திருத்தல்

1) ABCD 2) BCDE 3) CDEA 4) DEAB 5) EABC

The National e-learning Portal - The General Education

15) உரிமைகள் என்பவை

A - ஆளுமையை விருத்தி செய்வதற்கு அத்தியாவசியமானதாகும்.

B - சிவில், அரசியல் உரிமைகள் எனப் பிரித்து நோக்கலாம்.

C - சில உரிமைகள் அரச சட்டத்தின் மூலம் பாதுகாக்கப்படுகின்றன.

D - உரிமைகள் நாகரீகமான சமூகத்துக்கு இன்றியமையாதனவாகும்.

E - உரிமைகளுக்கும் கடமைகளுக்கும் தொடர்புகள் காணப்படுவதில்லை.

1) EABC 2) BADC 3) DEAB 4) CDEA 5) BCDE

16) சமூகம் என்பதற்கு பொருத்தமற்ற கூற்றைத் தெரிவு செய்க.

1) சமூகம் மனிதரின் சமூக நடத்தையில் செல்வாக்குச் செலுத்துகிறது.
2) சமூகம் அரசைவிட காலத்தால் முந்தியது.
3) சமூகம் இறைமை என்னும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.
4) அரசைவிட சமூகம் பரந்துபட்டதாகும்.
5) மனிதன் இயல்பாகவே தனித்து வாழ முடியாதபடியால் சமூகமாக வாழ்கிறான்.

17) ஒற்றையாட்சி முறைக்குப் பொருத்தமற்ற கூற்றைத் தெரிவு செய்க.

1) அரசின் இறைமை அதிகாரம் ஒரேயொரு அரசாங்கத்திடம் ஒருமுகப்படுத்தப்பட்டிருத்தல்.
2) மத்திய மாநில அரசுகளாகப் பிரிக்கப்பட்டு இறைமை அதிகாரம் பன்முகப்படுத்தப் பட்டிருத்தல்.
3) நிர்வாக ஓரினத் தன்மை காணப்படல்.
4) உள்ளூராட்சி மன்றங்கள் மத்திய அரசாங்கத்தினால் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களை மட்டும் பெற்றிருத்தல்.
5) ஐக்கிய இராட்சியம் ஒற்றையாட்சி முறைக்கு சிறந்த உதாரணமாக விளங்குதல்.

18) சமஷ்டி அரசாங்க முறைக்கு பொருத்தமற்ற கூற்றைத் தெரிவு செய்க.

1) எழுதப்பட்ட யாப்பும் அதன் உயர் தன்மையும்
2) அரசின் இறைமை மத்திய மாநில அரசுகளுக்கிடையே பன்முகப்படுத்தப்பட்டிருத்தல்
3) மத்திய மாநில அரசுகள் சுதந்திரமாக செயற்படுதல்
4) அதிகாரம் தொடர்பான தகராறுகளைத் தீர்த்து வைக்க உயர் நீதிமன்றம் ஒன்று இடம்பெறல்
5) மத்திய அரசாங்கம் தன்னிச்சையாக அரசியல் யாப்பைத் திருத்தும் முறை இருத்தல்

19) முரண்பாடு தீர்த்தலின் அடிப்படை நோக்கமாவது

1) ஒரு தரப்புக்கு வெற்றி கிடைப்பது
2) இரு தரப்பினருக்கும் வெற்றி கிடைப்பது
3) இரு தரப்பிற்கும் தோல்வி கிடைப்பது
4) ஒரு தரப்புக்கு மாத்திரம் அதிக வெற்றி கிடைப்பது
5) முரண்பாட்டு தரப்பு நீதிமன்ற முன்னிலையில் ஆஜராவது

20) சர்வதேச அரசியலில் பிரதான வகிபாகத்திற்கு பொருத்தமற்றது எது?

1) சுதந்திர இறைமைமிகு தேசிய அரசுகள்
2) பல்தேசியக் கம்பனிகள்
3) சர்வதேச ஸ்தாபனங்கள்
4) அரச சார்பற்ற அமைப்புக்கள்
5) தனிநபர்

21) அரச கொள்கை உருவாக்கம் தொடர்பிலான பொருத்தமற்ற விடையைத் தெரிவு செய்க.
   1) அரசின் அடிப்படை கொள்கைத் தத்துவங்களை வெளிக்காட்டுகின்றது
   2) நாட்டின் அரசியல் கட்சிகளின் தூர நோக்கினைத் தீர்மானிக்கிறது
   3) பொது நலனை இலக்காகக் கொண்டது
   4) அரசின் சட்ட ரீதியான மற்றும் அதிகார அடிப்படையைக் காட்டுகிறது
   5) நாட்டின் முழு அபிவிருத்தியினை இலக்காகக் கொண்டது

22) அரச நிர்வாகம் தொடர்பான பரப்பினுள் உள்ளடங்காத விடயம் எது?
   1) மனிதவள முகாமைத்துவமாகும்
   2) நிதி முகாமைத்துவமாகும்
   3) ஊழியர்களைப் பணியில் சேர்த்துக் கொள்ளலாகும்
   4) சட்ட உருவாக்கமாகும்
   5) அரச கொள்கை உருவாக்கமாகும்

23) ஒப்பங்கோடல் பற்றிய பொருத்தமற்ற கூற்றைத் தெரிவு செய்க.
   1) நேரடி சனநாயகத்தை நடைமுறைப்படுத்த உதவுகிறது
   2) அரசாங்க சட்டங்களின் சட்டமுறையான தன்மையை அதிகரிக்கச் செய்கிறது
   3) சட்டவாக்கப் பணியின் சுமையைக் குறைப்பதற்கு இதனைப் பயன்படுத்தலாம் என நம்பப்படுகிறது
   4) வளர்ச்சியடைந்த சனநாயக நாடுகளில் அதிகமாக பின்பற்றப்படுகின்ற முறையாகும்
   5) பொதுத்தேர்தலுக்கான ஒரு பிரதியீடாக இதனைப் பயன்படுத்த முடியும் என கருதப் படுகின்றது

24) லூதர் குலிக் என்பவரின் அரசாங்க நிர்வாக முகாமைத்துவம் என்பதில் அடங்காத அம்சம்
   1) திட்டமிடல்  2) ஒழுங்கமைத்தல்
   3) நெறிப்படுத்தல்  4) அறிக்கையிடல்
   5) வெளியேற்றுதல்

25) ஒரு அரசு தனது தேசிய அதிகாரத்தை செயற்படுத்தும் உத்திகளுள் அடங்காதது எதுவாகும்?
   1) செல்வாக்கைப் பிரயோகித்தல்
   2) கொடைகளை வழங்குதல்
   3) தண்டனை விதித்தல்
   4) பலப்பிரயோகத்தை (அதிகாரப் பிரயோகம்) மேற்கொள்ளல்
   5) வேறோர் அரசின் உதவியைப் பெறுதல்

26) இலங்கைத் தேசிய இயக்கம் பற்றிய சரியான கூற்றுக்களின் சேர்மானத்தைத் தெரிவு செய்க.
   A - மதப்புனருத்தாரண இயக்கத்தின் மூலம் ஆரம்ப அடிப்படை இடப்பட்டது
   B - இலங்கை சீர்திருத்தக் கழகத்தின் மற்றுமொரு முன்னோக்கிய வளர்ச்சிக் கட்டமாகும்
   C - உத்தியோகபூர்வ ஆரம்பம் தேசிய சங்கத்தின் தோற்றத்துடன் உருவாகியது
   D - உள்ளக சுயாட்சியை வெற்றி கொள்வது அதன் ஒரு நோக்கமாகும்
   E - இது ஒரு வெகுசன இயக்கமாகத் தொழிற்பட்டு வெற்றி கண்டது
   1) CDEA  2) BCDE  3) DEAB  4) BADC  5) EABC

27) 19ம் நூற்றாண்டின் பெருந்தோட்டத் தொழிலின் ஆரம்பத்துடன் தொடர்பற்ற விடயம்
   1) இலங்கை உலக பொருளாதாரத்தின் பங்குதாரராக மாறுவதற்கு வழிசமைத்தது
   2) வெளிநாட்டு மூலதனத்தில் உயர்ந்தளவு தங்கியிருக்கும் பொருளாதாரத்தை உருவாக்கியது
   3) நவீன வங்கி முறையின் தோற்றத்தை எளிதாக்கியது
   4) இலங்கையில் தொழிலாளர் பிரச்சினைகள் தோன்றுவதற்கு காரணமாகியது
   5) மரபுசார் நெல் விவசாயத்தை பொருளாதாரச் செயற்பாட்டு மையமாக ஆக்கியது

28) இடதுசாரி இயக்கம் தொடர்பான பிழையான கூற்றைத் தெரிவு செய்க.

1) உள்ளூர் சுயாட்சி நிர்வாகத்தைப் பெற ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டது
2) பொதுவுடமைச் சமுதாயமொன்றை தாபிப்பதனை பிரதான குறிக்கோளாகக் கொண்டிருந்தது
3) இலங்கை சமசமாசக் கட்சியின் தோற்றத்துக்கு வித்திட்டது
4) மத்திய வகுப்பு புத்தி ஜீவிகளினால் தலைமை தாங்கப்பட்டது
5) அரசியல் சக்தியானது நகர்ப்புற தொழிலாளர் வகுப்பில் தங்கியிருந்தது

29) 1833 இல் கட்டாய இராஜகாரியமுறை நீக்கம் தொடர்பான பொருத்தமற்ற கூற்று எது?

1) சேவையோடு கூடிய அடிமை மரபு முறையை முடிவுக்கு கொண்டு வந்தது
2) சுதந்திர உழைப்புச் சந்தையை உருவாக்குவதற்கான தடையை நீக்கியது
3) பெருந்தோட்டத் தொழிலின் வளர்ச்சிக்குரிய பின்புலத்தை உருவாக்கியது
4) பெருந்தோட்டத் துறைக்கான ஊழியர் பற்றாக் குறையை ஏற்படுத்தியது
5) நாட்டின் அபிவிருத்தி முயற்சிகளுக்கு ஊக்கமளித்தது

30) சாள்ஸ்கமரூன் ஆணைக்குழுவின் எதிர்ப்பார்ப்புடன் தொடர்பற்ற கூற்று எது?

1) நீதித்துறையின் சுதந்திரத்தை வலுப்படுத்தியது
2) முழு நீதி நிர்வாகமும் உயர் நீதிமன்றத்திற்குரியதாக இருக்க வேண்டும் என எதிர்பார்த்தது
3) மாவட்ட நீதிமன்றங்களை ஆரம்பிக்க வேண்டுமென எதிர்பார்த்தது
4) கோல்புறூக் ஆணைக்குழுவுடன் இணைந்து செயலாற்றியது
5) மேல் நாட்டவர்களுக்கு விஷேட நீதிச் செயன்முறை வழங்குவதனை எதிர்பார்த்தது

31) 1833 கோல்புறூக் - கமறன் சீர்திருத்தங்களின் கீழ் சட்ட நிர்வாக சபை தொடர்பான பொருத்தமற்ற கூற்றைத் தெரிவு செய்க.

1) ஆறு உறுப்பினர்களைக் கொண்டிருந்தது
2) அனைத்து உறுப்பினர்களும் உத்தியோக சார்புடையவர்களாவர்
3) தேசாதிபதி தலைமை வகித்தார்
4) நிர்வாக விடயங்களில் ஆள்பதிக்கு ஆலோசனை வழங்குகின்ற கடமையைக் கொண்டிருந்தது
5) உத்தியோகசார்பற்றோரும் உள்ளடக்கப்பட்டனர்

32) 1924 இல் இலங்கையில் நிலவிய வாக்குரிமை தொடர்பான சரியான கூற்று

1) சனத்தொகையின் பெரும்பான்மையோர் அதனைப் பயன்படுத்தினர்
2) பாமர மக்களையும் அரசியலில் பங்கு பற்ற வைத்தது
3) சாதாரண பொதுமக்களின் அரசியல் பங்கேற்பின் அவசியத்தை ஏற்றுக்கொண்டது
4) குறிப்பிட்டளவு சொத்து, கல்வித் தகைமையுடைய ஆண்களுக்கு வாக்குரிமை கிடைத்தது
5) மத்தியதர வகுப்பினர் அனைவருக்கும் வாக்குரிமையை வளங்கியது

➢ **33 - 40 வரையிலான வினாக்களுக்குரிய சரியான சேர்மானத்தைத் தெரிவு செய்க.**

33) டொனமூர் குழுவினர்

A - இனவாரிப் பிரதிநிதித்துவத்தை நீக்குவதற்கு சிபாரிசு செய்தனர்
B - சர்வசன வாக்குரிமையை சிபாரிசு செய்தனர்
C - டொமினியன் அந்தஸ்து வழங்குவதனை சிபாரிசு செய்தனர்
D - நிர்வாகப் பொறுப்புக்களை சுதேசியருக்கு வழங்க உடன்பட்டனர்
E - ஆள்பதி அரசியல் முரண்பாடுகளிலிருந்து விடுபட்டிருப்பதை எதிர்பார்த்தனர்

1) ABCD 2) ABED 3) BCDE 4) CDEA 5) EABC

34) டொனமூர் யாப்பின்கீழ் ஆள்பதியின் ஒதுக்கு அதிகாரங்கள்

A - அரச சேவையுடன் தொடர்பான சட்டங்கள்

B - நீதிமன்றங்களுடன் தொடர்புடைய சட்டங்கள்

C - நாட்டின் நீதி நிலைமைகளில் செல்வாக்குச் செலுத்தும் சட்டங்கள்

D - அரச பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள்

E - உள்ளூர் வர்த்தகத்துடன் தொடர்புடைய சட்டங்கள்

1) BCDE 2) CDAE 3) DEAB 4) EABC 5) BACD

35) சோல்பரி யாப்பிற்கமைய சட்டவாக்கத் துறையின் பண்புகளைக் குறிக்கும் தொகுதி

A - ஈரங்க மன்றமாக விளங்கியது

B - நியமனம் மற்றும் மக்கள் வாக்குகளால் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர்

C - சட்டவாக்க அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது

D - இரு மன்றங்களினதும் அதிகாரங்கள், பதவிக்காலம் என்பன சமனாக இருந்தன.

E - பிரதிநிதிகள் சபை சபாநாயகரால் தலைமைதாங்கப்பட்டது

1) BACE 2) DEAB 3) CDEA 4) BCDE 5) ABCD

36) சோல்பரி யாப்பிற்கமைய பிரதம மந்திரி

A - இலங்கைக் குடியரசின் தலைவராக விளங்கினார்

B - ஆள்பதி நாயகத்தினால் நியமிக்கப்பட்டார்

C - பாதுகாப்பு, மற்றும் வெளி விவகாரம் தொடர்பான அமைச்சுக்களைப் பொறுப்பேற்றுச் செயற்பட்டார்

D - தேர்தலொன்றில் வெற்றி பெற்ற பெரும்பான்மைக் கட்சியின் தலைவராக விளங்கினார்

E - கபினட் அமைச்சரவையை நியமிக்கும் முழு அதிகாரத்தையும் பெற்றிருந்தார்

1) CDEA 2) BCED 3) ABCD 4) DEAB 5) EABC

37) முதலாம் குடியரசு யாப்பிற்கமைய சட்டத்துறை

A - தேசிய அரசுப் பேரவை எனப் பெயர் பெற்றது

B - சட்டவாக்கத்தில் மீயுயர் அதிகாரத்தைக் கொணடிருந்தது

C - பதவிக் காலம் ஆறு வருடமாகும்

D - ஓரங்க மன்றமாக விளங்கியது

E - குடியரசுத் தலைவரினால் தலைமை தாங்கப்பட்டது

1) DEAB 2) EABC 3) CDEA 4) BCDE 5) BACD

38) 1972 அரசியல் யாப்பிற்கமைய பிரதம மந்திரி

A - அரசாங்கத்தின் தலைவராவார்

B - குடியரசுத் தலைவரினால் நியமிக்கப்பட்டார்

C - கபினற் அமைச்சரவையை தெரிவு செய்தார்

D - தேசிய அரசுப் பேரவையின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்ற ஒருவராக விளங்கினார்

E - தேசிய அரசுப் பேரவைக்கான உறுப்பினர்கள் சிலரை நியமிக்கும் அதிகாரத்தைக் கொண்டிருந்தார்

1) BCDE 2) CDEA 3) DEAB 4) BADC 5) EABC

39) 1978 அரசியல் யாப்பிற்கமைய ஜனாதிபதி

A - ஆயுதந்தாங்கிய படைகளின் படைத்தலைவராவார்

B - பிரதமர் உட்பட அமைச்சரவையை நியமிக்கிறார்

C - அமைச்சரவையின் தலைவராவார்

D - பாராளுமன்ற செயலாளர் நாயகத்தை நியமிக்கிறார்

E - யாப்பிற்கமைய பாராளுமன்றத்துக்கு பொறுப்புக்கூற கடமைப்பட்டவர் அல்ல

1) BACD 2) BCDE 3) EABC 4) DEAB 5) CDEA

40) 1978 அரசியல் யாப்பின் கீழ் உயர்நீதிமன்றம்

A - நீதி ஆலோசனை வழங்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது

B - இறுதி மேன்முறையீட்டு அதிகாரத்தை உடையது

C - அடிப்படைச் சட்டத்திலிருந்து அதிகாரத்தைப் பெறுகிறது

D - பிரதம நீதியரசர் உட்பட ஆறு இற்குக் குறையாததும் பத்திற்கு மேற்படாததுமான நீதிபதிகளைக் கொண்டதாகும்

E - பாராளுமன்ற தேர்தல் ஆட்சேபனை மனுக்களை விசாரிக்கும் அதிகாரத்தை உடையது

1) ABCD 2) BCDE 3) CDEA 4) DEAB 5) EABC

41) ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் வீற்றோ அதிகாரத்தைப் பெற்றுள்ள நாடுகளின் தொகுதி

1) சீனா, பிரான்ஸ், பிரித்தானியா, ரஷ்யா, ஐக்கிய அமெரிக்கா
2) ஜப்பான், சேர்மனி, ரஷ்யா, பிரித்தானியா, பிரான்ஸ்
3) இத்தாலி, பிரான்ஸ், ரஷ்யா, சீனா, பிரித்தானியா
4) சேர்மனி, ரஷ்யா, சீனா, பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா
5) சீனா, பிரான்ஸ், ஜப்பான், பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா

➢ **42 - 50 வரையிலான வினாக்களில் பொருத்தமற்ற கூற்றை தெரிவு செய்க.**

42) மாகாணசபை முறைமை

1) 13 வது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் உருவாக்கப்பட்டது
2) 1987ம் ஆண்டு இந்திய - இலங்கை உடன்படிக்கையின்படி உருவாக்கப்பட்டது
3) இலங்கையின் இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வாக முன்வைக்கப்பட்டது
4) ஒரு மாகாணத்துக்கு ஒரு மாகாணசபை என்றபடி உருவாக்கப்பட்டது
5) மாகாண ஆளுநர் மாகாண முதலமைச்சரினால் நியமிக்கப்படுகிறார்

43) மாகாண ஆளுநர்

1) 5 வருட காலம் பதவி வகிக்கிறார்
2) மத்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாவார்
3) மாகாணசபைக்கு பொறுப்புக் கூற வேண்டியதில்லை
4) மாகாணத்தின் மேல் நீதிமன்றத்திற்கான நீதிபதிகளை நியமிக்கிறார்
5) மாகாணசபையைக் கலைப்பதற்கான சிபாரிசினை சனாதிபதிக்கு வழங்குகிறார்

44) நடைமுறையிலுள்ள உள்ளூராட்சி அமைப்பு முறை

1) மாநகரசபை, நகரசபை மற்றும் பிரதேசசபைகளை உள்ளடக்கியதாகும்
2) விகிதசம பிரதிநிதித்துவ முறையின் மூலம் இதன் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர்
3) உள்ளூராட்சி அமைச்சின் மேற்பார்வைக்குக் கீழ்ப்பட்டதாகும்
4) வரிவருமானங்களில் இருந்து மாத்திரமே நிதியீட்டத்தினைப் பெறுகின்றன
5) தமது பிரதேச மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் முனைப்புடன் செயலாற்றுகின்றன.

45) சர்வதேச அரசியற் புலத்தினுள் சர்வதேச ஸ்தாபனங்கள் வளர்ச்சியடைவது தொடர்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

1) செய்திப் பரிமாற்றமும் போக்குவரத்துத்துறையில் ஏற்பட்ட துரித வளர்ச்சியும்
2) சமாதான வழிமுறையில் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளல்
3) நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை சர்வதேச அரசுகள் புரிந்து கொண்டமை
4) சீர்திருத்த செயற்திட்டங்களின் செல்வாக்குகள்
5) தமது முரண்பாடுகளையும் பிரச்சனைகளையும் தமது மட்டில் தீர்த்துக்கொள்ள முடியாது போனமை

46) நாடொன்றின் வெளிநாட்டுக் கொள்கையின் நோக்கம்

1) தேசிய இருப்பை உறுதி செய்தல்
2) வர்த்தகத்தை விருத்தி செய்தல்
3) வெளிநாட்டு உதவியைப் பெறுதல்
4) நாட்டின் சமூக நலன்களை விருத்தி செய்தல்
5) நாட்டின் கௌரவத்தை விருத்தி செய்யாது இருத்தல்

47) அரச சார்பற்ற அமைப்பு

1) சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்
2) சர்வதேச மன்னிப்புச்சபை
3) மனித உரிமைகள் மதிப்பீடுகளுக்கான அமைப்பு
4) பெடரல் அமைப்பு
5) ஐரோப்பிய பொருளாதார பொதுச் சமூகம்

48) தற்போது சார்க் வலய நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

1) பயங்கரவாதம் 2) ஆயுத வர்த்தகம்
3) இனப்பிரச்சனை 4) வறுமை
5) போதைப்பொருள் தடுப்பு

49) சர்வதேச மன்னிப்புச் சபை

1) பெண்கள் உரிமைகளைப் பாதுகாக்கிறது
2) இம்சித்தலை முடிவுக்குக் கொண்டு வர முயலுகிறது
3) மனிதனின் கௌரவத்தைப் பேணுகிறது
4) மரண தண்டனைகளுக்கான சிபாரிசுகளை வழங்குகிறது
5) அகதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கிறது

50) சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்

1) மனித சமூகத்தின் கௌரவத்தை பேணும் வகையில் செயற்படுகின்றது
2) அந்தந்த நாடுகளின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக செயற்படுகின்றது
3) எந்தவொரு இடத்திலும் மனித சமூகத்திற்கு நேருகின்ற துன்பகரமான நிகழ்வுகளைத் தடுப்பதற்கு அல்லது குறைப்பதற்கு முயலுகின்றன
4) இருதரப்பினருக்கும் இடையில் நடைபெறுகின்ற போர்களின் போது மத்தியஸ்தம் வகிக்கின்றது
5) பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இன, மத, வகுப்பு பேதமின்றி மக்களின் தேவைகளை நிறைவேற்றுகின்றன

(50 x 2 = 100 புள்ளிகள்)